பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
20 11 2024 **WEDNESDAY** 7 15 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மஹாராஷ்ட்ரா சட்டப்பேரவை தேர்தலில் 60 சதவீத வாக்குகளும் ஜார்க்கண்ட் சட்டப்பேரவை இறுதிகட்டத் தேர்தலில் 68 சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.
2. அரசுமுறைப் பயணமாக கயானா சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி அந்நாட்டு அதிபருடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுக்கள் நடத்துகிறார்.
3. சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. கிருஷ்ணகுமார், மணிப்பூர் மாநில உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.
4. பாகிஸ்தானில் நடந்த தற்கொலைப்படை தாக்குதலில் அந்நாட்டு ராணுவத்தைச் சேர்ந்த 12 வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.
5. சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் லக்ஷயா சென் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**>>>><<<<**

மகாராஷ்ட்ரா மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் 60 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக முதல்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

வாக்குப்பதிவு அமைதியாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஜார்கண்ட் மாநில சட்டப்பேரவைக்கு இரண்டாவது கட்டமாக 38 தொகுதிகளுக்கு இன்று நடைபெற்ற வாக்குப்பதிவில் 68 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

கேரளா, உத்தரப்பிரதேசம், பஞ்சாப், உத்தராகண்ட் மாநிலங்களில் உள்ள 15 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் வாக்குப்பதிவும் இன்று நடைபெற்றது.

இந்த தேர்தலில் பதிவான வாக்குகள் வரும் 23-ஆம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

இதனிடையே, உத்தரப்பிரதேச மாநிலம் கான்பூரில் **Sisamau** சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் நிறுத்தி வைக்கப்படுவதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இத்தொகுதியில், தேர்தல் தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகளுக்கு புறம்பாக சோதனை என்ற பெயரில் காவல்துறையினர் மேற்கொண்ட நடவடிக்கை தொடர்பாக கூறப்படும் புகாரை அடுத்து, அங்கு தேர்தல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மற்ற தொகுதிகளில் நடைபெறும் சட்டப்பேரவை இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேர்மையாகவும், சுமூகமாகவும் நடைபெறுவதை உறுதி செய்யுமாறு தேர்தல் அதிகாரிகளுக்கு, தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் அறிவுறுத்தினார்.

மஹாராஷ்ட்ரா மாநிலம், **Nanded** மக்களவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவும் இன்று நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

**>>>><<<<**

கயானாவின் உயரிய விருது பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு வழங்கப்படுகிறது.

அரசுமுறைப் பயணமாக கயானா சென்றுள்ள பிரதமருக்கு இன்று இந்த விருது வழங்கப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.
முன்னதாக, கயானா விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.
சிறப்பான வரவேற்பு அளித்த அந்நாட்டு தலைவர்களுக்கும், அங்குள்ள இந்திய வம்சாவளியினருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதாக அவர் தெரிவித்தார்.
கயானா அதிபர் டாக்டர் முஹமது இர்ஃபானுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி பேச்சு நடத்தவுள்ளார்.
இதன்பின்னர், இருநாடுகளுக்கும் இடையே பல்வேறு ஒப்பந்தங்களும் கையெழுத்திடப்படவுள்ளன.

**>>>><<<<**

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இன்று லாவோஸ் சென்றடைந்தார்.

அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் திரு.**Chansamone Chanyalath**-துடன் இருதரப்பு ஒத்துழைப்புகளை வலுப்படுத்துவது குறித்து அவர் பேச்சு நடத்தினார்.

பின்னர் ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்கள் நிலையிலான கூட்டத்தில் அவர் பங்கேற்கிறார்.

இதில் மண்டல மற்றும் சர்வதேச பாதுகாப்பு விவகாரங்கள் குறித்து அவர் உரையாற்றுகிறார்.

புருனே, கம்போடியா, இந்தோனேஷியா, லாவேஸ், மலேசியா, உள்ளிட்ட 10 உறுப்பு நாடுகளும், இந்தியா, அமெரிக்கா, சீனா உள்ளிட்ட எட்டு நாடுகள் சிறப்பு அழைப்பாளர்களாகவும் இக்கூட்டத்தில் பங்கேற்கின்றன.

ஆண்டுதோறும் நடைபெறும் இக்கூட்டத்தில், உறுப்பு நாடுகள் மற்றும் நட்பு நாடுகளிடையே பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான அம்சங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனிடையே, ஆஸ்திரேலியா, சீனா, ஜப்பான் உள்ளிட்ட ஒன்பது நாடுகளின் பாதுகாப்புத்துறை அமைச்சர்களை சந்தித்து, இருதரப்பு உறவுகள் குறித்து திரு ராஜ்நாத் சிங் பேச்சு நடத்தவுள்ளார்.

**>>>><<<<**

ராணுவ தலைமை தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி, நான்கு நாள் பயணமாக இன்று நேபாளம் செல்கிறார்.

இந்த பயணத்தின்போது, இருநாடுகளுக்கும் இடையே ராணுவ ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான புதிய சாத்தியக்கூறுகள் குறித்து, அந்நாட்டு அதிகாரிகளுடன் பேச்சு நடத்துகிறார்.

நேபாள நாட்டிற்கான இந்திய தூதர் திரு நவீன் ஸ்ரீவத்சவாவையும் சந்தித்து ஜெனரல் உபேந்திர திவேதி கலந்துரையாடுகிறார்.

அந்நாட்டு ராணுவ தலைமையகத்தில் நாளை நடைபெறவுள்ள அணிவகுப்பு மரியாதையையும் அவர் ஏற்றுக்கொள்கிறார்.

**>>>><<<<**

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. கிருஷ்ணகுமார், மணிப்பூர் மாநில உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை இப்பொறுப்பில் இருந்த திரு. சித்தார்த் மிர்துள் நாளை ஓய்வுபெறவுள்ளார்.

>>>><<<<

பாகிஸ்தான் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழகத்தைச் சேர்ந்த 7 மீனவர்களை விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை மத்திய உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கருக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

குஜராத்தின் போர்பந்தரிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற தமிழகத்தைச் சேர்ந்த 7 பேர் உட்பட இந்திய மீனவர்கள் 14 பேர் கடந்த ஜனவரி மாதம் பாகிஸ்தான் கடலோரப் படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ளதை அவர் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

நீண்ட காலமாக சிறையில் உள்ள மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று திரு. மு.க.ஸ்டாலின் அந்த கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>><<<<

பாகிஸ்தானில் நடந்த தற்கொலைப்படை தாக்குதலில் அந்நாட்டு ராணுவத்தைச் சேர்ந்த 12 வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தானில் கைபர் மாகாணத்தில் உள்ள பாதுகாப்புப் படையினரின் நிலைகள் மீது நேற்றிரவு இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக அந்நாட்டு ராணுவ ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட வாகனம் மூலம் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து, பாகிஸ்தான் ராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே நிகழ்ந்த துப்பாக்கிச் சண்டையில் ஆறு தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

>>>><<<<

சர்வதேச திரைப்பட விழா, வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் கோவா-வில் இன்று தொடங்கியது.

இம்மாதம் 28-ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இந்த திரைப்பட விழாவில் 81 நாடுகளைச் சேர்ந்த 180க்கும் மேற்பட்ட திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளன.

>>>><<<<

நடப்பு நிதியாண்டின் முதல் அரையாண்டு காலத்தில் நிலக்கரி இறக்குமதி ஒன்பது புள்ளி எட்டு மூன்று சதவீதம் குறைந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக, நிலக்கரி அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், உள்நாட்டு நிலக்கரி உற்பத்தி காரணமாக இறக்குமதி குறைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், எஃகு தொழிற்சாலைகள் மற்றும் அனல்மின் நிலையங்களுக்கு தேவைப்படும் நிலக்கரி வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வருவதாக அதில் கூறப்பட்டுள்ளது.

உள்நாட்டில் நிலக்கரி உற்பத்தியை ஊக்குவித்து, போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதன் மூலம், நிலக்கரி இறக்குமதியை குறைப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>><<<<**

யுக்ரைன் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 2025-ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டுக்கு அந்நாட்டு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த பட்ஜெட்டில் ராணுவ செலவினம், சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

பாதுகாப்புத்துறையின் மேம்பாட்டிற்காக 54 பில்லியன் அமெரிக்க டாலர் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

அந்நாட்டு பணவீக்க விகிதம் ஒன்பது புள்ளி ஐந்து சதவீதமாகவும், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி இரண்டு புள்ளி ஏழு சதவீதமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் அந்த பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>><<<<**

லட்சத்தீவுகள், கேரளா மற்றும் மாஹே பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அந்தமான் நிக்கோபார் தீவுகளில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

கிழக்கு உத்தரப்பிரதேசம், தில்லி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் அடுத்த மூன்று நாட்களுக்கு இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் கடும் பனிப்பொழிவிற்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதனிடையே தமிழகத்தில் அடுத்த 24 மணிநேரத்தில் நாகை, திருவாரூர், கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**>>>><<<<**

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் லக்ஷயா சென், பி.வி. சிந்து மற்றும் **Malvika Bansod** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-14, 13-21, 21-13 என்ற செட்கணக்கில் மலேசியாவின் **Lee Zil Jia**-வை வென்றார்.

மகளிர் இரட்டையர் பிரிவில் **Trissa Jolly – Gayathri Gopichand** இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

**>>>><<<<**

ஆசிய மகளிர் ஹாக்கி சாம்பியன் கோப்பையை இந்தியா வென்றது..

பீகாரில் இன்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் இந்தியா 1-0 என்ற கோல்கணக்கில் சீனாவை வென்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

இப்போட்டியின் மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் ஜப்பான் 4-1 என்ற கோல்கணக்கில் மலேசியாவை வென்றது.

**>>>><<<<**

உலக இளையோர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி இன்று ஸ்வீடன் புறப்பட்டுச் சென்றது.

இப்போட்டி நாளை மறுநாள் தொடங்குகிறது.

**>>>>END<<<<**